**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)

IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUNELVELI

M.C.O.P. No.1978/2024

DEPOSITION OF WITNESS FOR PW-2

| | | |
|---|---|---|
| NAME | : | திருமதி.செல்வி |
| Husbands' NAME | : | திரு.ராஜதுரை |
| VILLAGE | : | சத்திரப்பட்டி |
| TALUK | : | விருதுநகர் |
| CALLING | : | MCOP 1967/24 மனுவின் 2ம் மனுதாரர் |
| AGE | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16th day of April 2026.

**முதல் விசாரணை :-**

நான் MCOP 1967/24 மனுவின் 2ம் மனுதாரர் ஆவேன். என்னுடைய சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். ரவிக்குமார் என்பவரின் பிரேத பரிசோதனை அறிக்கை **ம.சா.ஆ.7.** மனுதாரர்களின் ஆதார் அடையாள அட்டைநகல் **ம.சா.ஆ.8**. மனுதாரர்களின் வங்கிக்கணக்கு புத்தகம் நகல் **ம.சா.ஆ.9** மனுதாரர்களின் பான் கார்டு நகல் **ம.சா.ஆ.10.** இறந்த ரவிக்குமார் என்பவரின் ஓட்டுநர் உரிமம் நகல் **ம.சா.ஆ.11**. வாரிசு சான்றிதழ் நகல் **ம.சா.ஆ.12**. மனுப்படி உத்தரவாக வேண்டிக்கொள்கிறேன்.

<u>2, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :-

நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் மில்லில் வேலை பார்த்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன நபர் எனது மகன். என் மகன் டிரைவராக வேலை பார்த்ததை காட்டக்கூடிய எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோன எனது மகனின் வயது, வேலை, வருமானம் காட்டக்கூடிய எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பொதுவாக சாலையில் வேலை நடந்து கொண்டிருக்கும்போது வாகனங்கள் மெதுவாக தான் செல்லும் என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக நான் போலிசில் புகார் கொடுத்தேனா என்றால் நான் கொடுக்கவில்லை. விபத்தில் எனது மகன் ஓட்டிச்சென்ற வானத்தின் பின்புறம் ரஞ்சித்குமார் என்பவர் அமர்ந்து சென்றார் என்றால் சரிதான். விபத்தில் எனது மகனும், பின்னால் அமர்ந்து சென்ற ரஞ்சித்குமாரும் தலைக்கவசம் அணியாமல் சென்றனர் என்றால் சரியல்ல. விபத்தில் எனது மகனின் வாகனத்திற்கு பின்னால் அமர்ந்து சென்ற ரஞ்சித்குமார் பேசிக்கொண்டே சென்றதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் சாலையில் வேலை நடந்து கொண்டுயிருந்ததால் 1ம் எதிர்மனுதாரர் லாரி மெதுவாக தான் வந்தது என்றால் சரியல்ல. எனது மகனும், பின்னால் அமர்ந்து சென்ற ரஞ்சித்குமாரும் தலைக்கவசம் அணியாமல் சென்றதால் 2,3

எதிர்மனுதாரர்கள் எந்த இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர்கள் அல்ல என்றால் சரியல்ல. விபத்து சம்மந்தமான மாதிரிவரைபடம், பார்வைமகஜர் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். விபத்திற்கு எனது மகனின் அதிவேகமும், கவனக்குறைவும் தான் காரணம் என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை மிக அதிகமானது என்றும் அது எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. எனது மகன் எந்த வேலையும் செய்யவில்லை நான் தான் பராமரித்து வந்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. 2,3 எதிர்மனுதாரர்களை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Taken down before me in open court and read over to the witness and acknowledge by him to the correct

I Additional District Judge,

Tirunelveli.

**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)

IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUNELVELI

M.C.O.P. No.1978/2024

DEPOSITION OF WITNESS FOR PW-3

| | | |
|---|---|---|
| NAME | : | திரு. ராஜேஷ்கனி |
| Husbands' NAME | : | திரு. ஜெயகுமார் |
| VILLAGE | : | ஜமீன் நத்தம்பட்டி |
| TALUK | : | விருதுநகர் |
| CALLING | : | மனுதாரர்தரப்பு சாட்சி |
| AGE | : | 21 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16th day of April 2026.

**முதல் விசாரணை :-**

நான் இம்மனுவில் 3ம் நபர் ஆவேன். என்னுடைய சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். என்னுடைய ஆதார் அட்டையின் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது **சா.சா.ஆ.1** ஆகும்.

**2, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

இந்த வழக்கில் இறந்துபோன நபர் எனது உறவினரா என்றால் இல்லை ஊர்க்காரரர். நான் விபத்தை நேரில் பார்த்தாக போலிசில் புகார் எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. போலிசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை.

விபத்து சம்மந்தமாக நான் வேறு நீதிமன்றங்களில் சாட்சியம் அளித்துள்ளேனா என்றால் இல்லை. நான் இன்று நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். மனுதாரர் அழைத்தன்பேரில் தான் வந்தேன் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் விபத்து நடந்த ரோட்டில் வேலை நடந்து கொண்டிருந்தது என்றால் சரிதான். சாலை வேலை நடந்ததால் லாரி மெதுவாக தான் வந்தது என்றும் நான் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. விபத்திற்கு இறந்துபோன ரவிக்குமார், பின்னால் அமர்ந்து சென்ற ரஞ்சித்குமாரும் பேசிக்கொண்டே சென்றது தான் காரணம் என்றால் சரியல்ல. மனுதாரர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவர்களுக்கு இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Taken down before me in open court and read over to the witness and acknowledge by him to the correct

I Additional District Judge,

Tirunelveli.